RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1925

# திருக்குறளில் அறச்சிந்தனைகள்

சு. சீலா [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Thoughts in Thirukkural

S. Sheela [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-62001, Tamil Nadu, India

* Corresponding Author: jaiphyrock24@gmail.com

Received: 06-08-2022
Revised: 17-09-2022
Accepted: 01-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Every human being should do virtue as much as possible. A richest person will not attain happiness until he spends his money in charity and by spending so he will get more pleasure. Virtue adds pride to human life. There is no wealth better than virtue. In today's civilized world, morality is the number one thing that mankind lacks. The first wealth that one can acquire is education. Education is a tool that opens man's knowledge. If a man has good knowledge, no powerful enemy can destroy him and it protects him from his sufferings. The mind is like a cow and it tends to go where ever its feet go. Having good knowledge stops a person from doing evil things. When friends do immoral things, it is our duty to take him into the right path. In this way, this article examines morality, education, moral ideas and knowledge.

**Keywords:** Thirukkural, Philosophical Thoughts, Education

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களுள் சிறப்பிடம் பெற்ற அறநூல் திருக்குறள் ஆகும். மனிதவாழ்வின் முக்கிய கூறுகளாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது. 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று தொடங்கி, ஈரடி குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் 'திருக்குறள்' என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப்படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் இடத்தை நிலைபெற செய்தவர். உலக மக்களால் 'தெய்வப்புலவர்' 'பொய்யில் புலவர்' 'நாயனார்' 'தேவர்' என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். அவர் எழுதிய திருக்குறள் வாழ்வியலின் எல்லா அறங்களையும் எடுத்துக்கூறும் விதமாக 'உலகப்பொதுமறை' 'முப்பால்' 'தமிழ்மறை' போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கின்றனர். அத்தகைய சிறப்பு மிக்கத் திருக்குறள் காட்டும் அறங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம்

கழகத் தமிழ் அகராதி

“கடமை, நோன்பு, தருமம், கற்பு,

இல்லறம் துறவறம், நல்வினை, அறநூல்,

அறக்கடவுள், தருமதேவதை”

எனப் பல பொருள்களைத் தருகிறது (Pulavar Kulu, 1964).

அழுக்காறு (பொறாமை) அவா பேராசை வெகுளி (சினம்) இன்னாச்சொல் (கடுஞ்சொல்) ஆகிய நான்கையும் அறுப்பதே அறம் எனப்படும் என்கின்றார் வள்ளுவர், இதனை

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்

'மனத்தின் கண் குற்றம் இல்லாது இருத்தலே அறவழியில் செல்லுதலாகும்' இதனையே பின்வரும்குறள் காட்டுகின்றது (Varadarasanar, 2000).

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தரன்

ஆகுல நீர பிற"

என உரைக்கின்றார் (Varadarasanar, 2000).

"எழுத்தாணியும் உடையும் அளித்தலைச் சிறந்த அறமென்று"

ஏலாதி செய்யுள் கூறுகின்றது (Dakshinamurthy, 1999).

## நட்பு

நட்பு, தோழமை, சினேகம் என்பது இருவரிடையே அல்லது பலரிடையே ஏற்படும் ஓர் உறவாகும். வயது, மொழி, இனம், நாடு என எல்லைகள் இன்றிப் புரிந்து கொள்வது நட்பு ஆகும். வாழ்வில் நட்பை போன்று செய்து கொள்வதற்கரியபொருட்கள் எவையும் இல்லை என்பதனை வள்ளுவர்.

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல

வினைக்கரிய யாவுள காப்பு"

என்று கூறியுள்ளார் (Varadarasanar, 2000). நட்பைப்பற்றி வள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், பழமை தீநட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களில் விளக்கியுள்ளார்.

நண்பன் துன்புறும் போது சிறந்த நண்பன் உதவும் முறையினைக் குறிப்பிடுகிறார்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் கலைவதாம் நட்பு"

என்றும், இக்கருத்தையே மற்றுமொரு அறநூலின் வழி உணர முடிகிறது (Varadarasanar, 2000). அக்கருத்தை

'நாட்டார் இடுக்கண் காண்டல் நானியின்னா"

பாடலடி வழி உணர்த்துவத்தைக் காண முடிகிறது (Mathavan, 2001).

சங்க இலக்கிய பாடல்களில் கூடநட்பறத்திற்கானச் சான்றுகளை நாம் காணமுடிகிறது. தலைவன், தலைவியின் அன்பு கலந்த காதல் வாழ்வை நிலைபெறச் செய்து கற்பு வாழ்வை மலரச் செய்த தோழி அறத்தொடு நின்று எடுத்துரைக்கும் பாங்கு இங்குச் சான்றாகத் தரப்படுகிறது. அச்செய்தி

"வேரல்வேலி வேர்க் கோட்பலவின்

சார னாட செவ்வியை யாகுமதி'

யார தறிந்திசி னோரே சாரந்

சிறுக் கோட்டு பெரும் பழம் தூங்கி யாங்கிவள்

உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே”

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது (Subramanian, 2010).

## கல்வி

மனித குலத்திற்கு கல்வி மிகவும் இன்றியமையாததாகும். கல்வி இல்லாதவன் பயனற்றவன் ஆவான், கல்வி கற்று மனத்தில் இருத்தி கொள்ள வேண்டும். என்பதை

“கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்கு தக”

ஒருவன் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நூல்களைக் குற்றம் ஏதும் இல்லாமல் கற்றுக் கொள்ள வேண்டும் (Varadarasanar, 2000). இந்நூல்களைக் கற்றபின் நல்வழியில் இருந்து நீங்காமல் இருக்க வேண்டும் என இக்குறள் வழி விளக்குகிறார், வள்ளுவர்,

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையார் கல்லாதவர்” (Varadarasanar, 2000).

ஆரியப்படைக் கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பாடிய பாடலில்

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே”

ஆசிரியர்க்கு உற்றவிடத்தில் உதவியும், மிக்க பொருள் கொடுத்தும் கற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Balasubramanian, 2004). நீரை நீக்கிப் பாலை மட்டும் பருகும் அன்னம் போல் கல்வி கற்க வேண்டும் என்பதனை

“கல்வி கரை இல, கற்பவர் நாள்சில

மெல்ல நினைக்கின் பிணிபல, தெள்ளிதின்

ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர் ஒழியப்

பாலுண் குருகின் தெரிந்து”

என்று நாலடியார் நவில்கின்றது (Goumareeswari, 2009).

“கல்வி அறிவு இல்லாத உடம்பை பெற்றிருத்தல் பயனற்றதாகும்” என்பது

“தனக்குப்பாழ் கற்றறிவில்லா உடம்பு”

என்றும் இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம் என்றும் நான்மணிக்கடிகை கூறுகிறது (Meiyappan, 1996).

## அறிவு

மனத்தை அது சென்ற இடங்களிலேயே செல்லவிடாமல், தீமைகளிலிருந்து விலக்கி நன்மையில் மட்டுமே செல்ல விடுவது அறிவு ஆகும், இதனையே

“சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ

நன்றின்பால் உய்ப்பது அறிவு”

என்ற குறள் வழி அறியப்படுகிறது (Varadarasanar, 2000).

எவரெவரிடமிருந்து கேட்பதானாலும் அப்பொருளின் மெய்யான தன்மைகளைக் காண்பது தான் அறிவு ஆகும்.

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு”

என்ற குறள் வழி உணர்த்துகிறது (Varadarasanar, 2000). அறிய வேண்டியதை அறிந்துகொண்டும் பிறர் அறிவுரையைக் கேட்டுக் கொண்டும், அவர்களை மதிப்பதும் என இவை மூன்றும் அறிவுடையார் செயல் ஆகும்.

சொற்களை ஆராய்ந்து பொருள் கொள்ளுதல், பயனற்றா சொற்களைச் சொல்லாதிருப்பது படித்தறிந்தவர் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும் என்பது

“நுண்மொழி நோக்கிப் பொருள் கொளலும்

நூற்கு ஏழா வெண்மொழி வேண்டினும் சொல்லாமை”

என்று திரிகடுகம் மேற்கோள் காட்டுகிறது (Venkatasami Nattar, 1981).

## ஒழுக்கம்

ஒருவன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன் என்பதற்கு அடையாளமே ஒழுக்கம் தான். அத்தகு ஒழுக்கத்தை தன் உயிரைக் கொடுத்தாவது காக்கவேண்டும் ஒழுக்கமில்லாதவன் விலங்கினைப் போல் வாழ்வதோடு வாழ்வில் எவ்வித உயர்ச்சியும் பெறமுடியாதவனாகத் துன்பத்தோடு வாழ நேரிடுகிறது. சிந்திக்கக் கூடிய மனிதன் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் என்பதை

“ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”

என்ற குறள் வழி அறியலாம் (Varadarasanar, 2000).

“நல்லொழுக்கம் இன்பமாகிய அறவாழ்விற்கு விதைபோன்றது தீயொழுக்கம் துன்பத்தைத் தரும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்”

என்றும் இடும்பைத் தரும்.

என்னும் குறள் உணர்த்துகிறது (Varadarasanar, 2000).

எக்காலத்தும் ஒழுக்கத்தின்று தவறாதவர் என்பதை

“பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம், வனப்பு

நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை

இலக்கணத்தால், இவ்வெட்டும் எய்துப என்றும்

ஒழுக்கம் பிழையாதவர்”

என்ற இயல்பினை அடைவர் என்பதை ஆசாரக்கோவை கூறுகின்றது (Meiyappan, 1996).

## முடிவுரை

நீதி நூல்களுள் தலையாயது திருக்குறள். இவை நாடு, மொழி, இனம், எல்லை, காலம், சாதி, மதம் அனைத்தையும் கடந்த தமிழில் உள்ள ஒரே நூலாகும். மனிதன் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வாழ்வியல் செய்திகளும் இதன்பால் உள்ளன. வாழ்க்கையில் ஒருவன் எப்பொழுதும் இனிய சொற்களைப் பேசி மற்றவர்களுடன் நட்பு கொள்ளுதல் வேண்டும். நட்புக் கொள்வதற்கு முன் நன்கு

ஆராய்ந்து பழுகுதல் வேண்டும். அறிவுடையோர்களின் நட்பை தேடி பெற வேண்டும். சிறந்த ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். தெளிவாக கற்க வேண்டும், குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதனை நன்னெறிப் படுத்துதல் அறிவு ஆகும். மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை திருக்குறளின் வாயிலாக அறிய முடிகிறது.

## References


Balasubramanian, K.V. (2004) Purananuru, New Century Book House, Chennai, India.

Dakshinamurthy, A. (1999) Tamilar Nagarigamum Panpadum, Yaazhl Veliyedu, Chennai, India.

Goumareeswari, (2015) Naladiyar Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Mathavan, R. (2001) Nanmanik Kadikai Moolamum Uraiyum, Manivasagar Pathippagam, Chennai, India.

Meiyappan, (1996) Acharakovai Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Pulavar Kulu, (1964) Kazhaga Tamil Agarathi, Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli, India.

Subramanian, K.V. (2010) Ettuthogai Moolamum Uraiyum, Manivasagar Pathippagam, Chennai, India.

Varadarasanar, A. (2000) Thirukkural, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Venkatasami Nattar, N.M. (1981) Thirikadugam Moolamum Uraiyum, Kazhaga Veeliyeedu, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License